<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>

<u>O.S.No.100/2011</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திருமதி. சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரத்தினகுமார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சிற்சபை | கிராமம் | : | |
| வயது | : | 78 | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**<u>மனுவின் பெயரில் பி.வா.சா. 1 முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>நீதிமன்ற குறிப்பு –</u>** சாட்சியின் வயோதிகம் மற்றும் உடல்நிலை காரணமாக சாட்சி, சாட்சி கூண்டில் ஏற்றப்படாமல் நிற்கவைக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| தேதி | ஆவணங்கள் விவரம் | ஆவண எண் |
|---|---|---|
| | திரு.பாலமுருகன் மற்றும் ரேவதியின் திருமண அழைப்பிதழ் அசல் | **பி.வா.சா.ஆ.11** |
| | திரு. ரத்தினகுமாரின் குடும்ப அட்டை அசல் | **பி.வா.சா.ஆ.12** |

மேலும் வாதியின் திருமண அழைப்பிதழ் நகலை குறியீடு செய்ய கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார். மேற்படி ஆவணத்தை பார்க்கும் போது அது நகல் என்பது தெரிய வருகிறது. அந்த நகல் சம்மந்தமான பிரிவு 65, 66 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் இரண்டாம் நிலை சாட்சியத்திற்கான எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி ஆவணம் பிரிவு 65, 66 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மேலும் மேற்படி ஆவணத்தை பற்றி 1ம் பிரதிவாதியின்

வாதுரையில் குறிப்பிட்டு எதுவும் இல்லை என்பதாலும் மேற்படி ஆவணம் நிராகரிக்கப்படுகிறது.

**கற்றறிந்த  வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை  ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN